கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.
முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள், 5ஆம் நாள் திங்கட்கிழமை
I.A.No.4/2025 in HMOP.No.112/2023

அருள்தரும்ஜோதி . . . மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிராக/

சித்ரா . . . எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 27.11.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.K.கௌதமன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு Or.8R1A – ன் படி மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்று வழக்கை மேல்நடத்த உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் மனுவில் எதிர்மனுதாரர் என்றும், எதிர்மனுதாருக்கு திருமணத்தின்போது அணிவிககப்பட்ட நகைகள் அனைத்தையும் மனுதாரரிடம் சொல்லாமல், மனுதாரர் வீட்டிலிருந்து அவருக்கு சொந்த ஊருக்கு வரும்போது எடுத்து வந்துவிட்டார் என்றும், திருமணத்தின்போது மனுதாரருக்கு 3 சவரன் செயினும் 2 சவரன் பிரேஸ்லெட்டும் அணிவித்தார்கள் என்றும், ஆக மொத்தம் 5 சவரன் நகைகள் அணிவிக்கப்பட்டது என்றும், திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு 3 சவரன் நெக்லஸ், 4 சவரன் டாலர் செயின் அணிவித்தார்கள் என்றும், எதிர்மனுதாரரின 7 சவரன் மற்றும் மனுதாரருக்கு அணிவிக்கப்பட்ட 5 சவரன் ஆக மொத்தம் 12 சவரன் நகைகள் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதாகும் என்றும், அதில் 3 சவரன் நெக்லஸ் இருவரின் சம்மதத்தின் பேரில் விற்பனை செய்துவந்த தொகை ரூ.90,000த்தை குடியிருக்கும் வீட்டை புதுப்பிக்க செலவு செய்தார்கள் என்றும், திருமணத்தின்போது மனுதாரருக்கும், எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் ரூ.2,00,000/–ம் கொடுத்தார்கள் என்றும், மேற்படி தொகையில்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.05 10:57:36 +0530

கட்டில், பீரோ, பிரிட்ஜ், வாஷிங்மெஷின் மற்றும் இதர சீர்வரிசை பொருட்கள் வாங்கி அவைகள் தற்போது மனுதாரர் வசம் உள்ளது என்றும், அவைகளை திரும்ப தர தயராக உள்ளார் என்றும், எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் தங்க நகையை மனுதாரரின் வீட்டிலிருந்து கொண்டு வரவில்லை என்று சொல்லியிருக்கிறார் என்றும், மொத்தம் 12 சவரன் நகைகளில் 3 சவரன் நகைகள் போக மீதி உள்ள 9 சவரன் நகைகள் மட்டுமே மனுதாரரின் வீட்டிலிருந்தது என்றும், அந்த 9 சவரன் நகைகளையும் எதிர்மனுதாரர் அவரது தாய் வீட்டிற்கு செல்லும்போது எடுத்து வந்துவிட்டார் என்றும், எனவே தற்போது மனுதாரர் வசம் எதிர்மனுதாரருக்கு சேர வேண்டிய எந்த தங்க நகைகளும் இல்லை என இம்மனுதாரர் தெரிவித்துக் கொள்கிறார் என்றும், எதிர்மனுதாரரின் தந்தை குப்பன் என்பவர் மனுதாரரின் தாயாரிடம் அலைபேசியில் பேசியபோது பதிவு செய்யப்பட்ட ஆடியோ ரெக்காட்டில் தன் மகள் வீட்டிலிருந்து வரும்போது 9 சவரன் தங்க நகைகளை போட்டுக் கொண்டுதான் வந்துள்ளார் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், அலைபேசியில் பேசியபோது பதிவு செய்யப்பட்ட ஆடியோ பதிவு அடங்கிய குறுந்தகடு தன் தரப்பில் தாக்கல் செய்தால் மட்டுமே தன் நியாயத்தை நிலை நிறுத்த முடியும் என்றும், எனவே மனுவில் கண்டுள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து ஆவணத்தை ஏற்று தக்க உத்தரவிட வேண்டி மனுதாரர் பரம் மனு தாக்கல்.

**3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்</u>**

மனுதாரரின் மனு பொய்யானது, மோசவிதமானது என்றும், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், திருமணத்தின்போது இவ்எதிர்மனுதாரருக்கு மொத்தம் 20 சவரன் நகைகள் போடப்பட்டது என்றும், ரூ.2,00,000/-ம் ரொக்கமாக வரதட்சணையாக கொடுக்கப்பட்டது என்றும், இவ்எதிர்மனுதாரருக்கு 3 சவரனில் நெக்லசும் 4 சவரனில் தாளிசெயினும் 3 சவரனில் மைனர் செயினும் தாலி சரடு 3 சவரனிலும் பிரேஸ்லேட் 2 சவரனிலும் கம்மல்ஜிமிக்கு 2 சவரனிலும் இவ்எதிர்மனுதாரரின் வீட்டில் போட்டனர் என்றும், மேலும் இவ்எதிர்மனுதாரருக்கு பெண் குழந்தை பிறந்தபோது குழந்தைக்கு 1 ½ சவரனில் நகையை போட்டனர் என்றும், ஆனால் தற்போது மனுதாரர் மேற்படி உண்மைகளை மறைத்து மொத்தம் 12 சவரன் நகை மட்டுமே போட்டதாக மனவில் கண்டுள்ளார் என்றும், அதுமட்டுமல்லாமல் இவ்எதிர்மனுதாரரின் வீட்டைவிட்டு வரும்போது மேற்படி நகைகளை எடுத்துக்கொண்டு வந்துவிட்டதாகவும் மனுவில் கண்டுள்ளதை இவ்எதிர்மனுதாரர் வன்மைாக மறுக்கிறார் என்றும், இவ்எதிர்மனுதாரர் வீட்டைவிட்டு வரும்போது எந்த நகையையும் எடுத்துக்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.05 10:57:44 +0530

கொண்டுவரவில்லை என்றும், இவ்எதிர்மனுதாரர் வீட்டைவிட்டு வரும்போது மனதாரரின் தாய்தந்தையரும் மனுதாரரின் சகோதரரும் சேர்ந்து அடித்து துன்புறுத்தி வீட்டைவிட்டு துரத்திவிட்டனர் என்றும், இவ்எதிர்மனுதாரர் உடுத்தியிருந்த உடையுடன் எப்படியாவது தன்னுடைய தாய் வீட்டிற்கு வந்துசேர்ந்துவிட வேண்டுமென்று உடமைகளையும், நகைகளையும் துணிகளையும் மனுதாரரின் வீட்டிலேயே விட்டுவிட்டு துரத்தப்பட்டார் என்றும், அவ்வாறான சூழ்நிலையில் இவ்எதிர்மனுதாரர் வரும்போது அவ்வாறான சூழ்நிலையில் இவ்எதிர்மனுதாரர் வரும்போது தன்னுடைய சூழ்நிலையில் இவ்எதிர்மனுதாரர் வரும்போது தன்னுடைய நகைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார் என்று மனுவில் கண்டிருப்பது உண்மையல்ல என்றும், இவ்எதிர்மனுதாரரின் தந்தை குப்பன் மனுதாரரின் தாயாரிடம் அலைபேசியில் பேசிய போது பதிவு செய்யப்பட்ட ஆடியோ ரெகார்ட்டில் தன் மகன் வீட்டிலிருந்து வரும்போது 9 சவரன் தங்க நகைகளை போட்டுக் கொண்டுதான் வந்துள்ளார் என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அவ்வாறு அலைபேசியில் பேசியபோது பதிவு செய்யப்பட்ட ஆடியோ பதிவு அடங்கிய குறுந்தகடு மனுதாரர் வசம் இருப்பதாகவும் அதனை கனம் கோர்ட்டில் தாக்கல் செய்தால் மட்டுமே தன் தரப்பு நியாயம் தெரியவரும் என்று மனுவில் கண்டுள்ளதை இவ்எதிர்மனுதாரர் வன்மையாக மறுப்பதாகவும், இவ்எதிமனுதாரரின் தந்தை எப்போதும் நகைகள் குறித்து மனுதாரரின் தாயாரிடம் கைபேசியில் பேசியதில்லை என்றும், அதனால் இவ்எதிர்மனுதாரர் மனுதாரரின் வீட்டைவிட்டு வெளீ வரும்போது தன் உயிரை காப்பபாற்றிக் கொண்டால் போதும் என்றுதான் அங்கிருந்து வந்து சேர்ந்தார் என்றும், அவ்வாறான சூழ்நிலையில் இவ்எதிர்மனுதாரர் வரும்பொழுது நகைகளையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார் என்பது நம்பும்படியாக இல்லை என்றும், மேலும் மனுதாரர் வீட்டில் இவ்எதிர்மனுதாரரை அடித்து வீட்டைவிட்டு துரத்தினர் என்றும், அவ்வாறு அடித்து வீட்டைவிட்டு துரத்தும் போது இவ்எதிர்மனுதாரர் தன்னுடைய நகைகளை எடுத்துக்கொண்டோ அணிந்து கொண்டோ வந்தால் மனுதாரரின் வீட்டார் அதனை அனுமதித்திருக்கமாட்டார்கள் என்றும், அதனால் மனுதாரரின் ஆவணம் ஏற்புடைய ஆவணம் அல்ல என்றும், அதனால் அதனை நிராகரிக்க வேண்டும் என்றும், மனுதாரரின் மனுவினை இவ்எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிர்மனுதாரர் பரம் எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் அசல் மனுவில் எதிர்மனுதாரர் ஆவார். எதிர்மனுதாரர் அசல் மனுவில் மனுதாரர் ஆவார். எதிர்மனுதாரர் மனுதாரராக இருந்து இம்மனுவின் மனுதாரருக்கு எதிராக இருவருக்குமிடையே நடந்த திருமணபந்தத்தை ரத்து செய்யவேண்டி அசல்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.05 10:57:51 +0530

வழக்கு தாக்கல் செய்தார். அசல் மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1, ம.சா.2 விசாரிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு மனுதாரர் தரப்பு சட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரணைக்காக நிலுவையிலிருந்து வந்த நிலையில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தன் மனுவில் எதிர்மனுதாரருடன் மனுதாரரின் தந்தை பேசிய ஆடியோ இம்மனுவுடன் தாக்கல் செய்வதாகவும், எனவே மனுதாரர் தாக்கல் செய்யும் சிடி கேசட்டினை ஏற்று அசல் மனுவினை மேல்நடத்தவேண்டி காரணம் குறிப்பிட்டுள்ளார். மனுதாரரின் ஆவணம் ஏற்புடையதல்ல என்றும், நிராகரிக்க வேண்டிய ஒன்று என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணம் அசல் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்களா இல்லையா என்பதை பொறுத்து தற்சமயம் தீர்வு காண இயலாது என்பதாலும், அசல் மனுவின் இறுதி விசாரணை முடிவின்போது தான் தீர்வு காண இயலும் என்பதாலும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்புடையதாக உள்ளதாலும், மனுதாரர் தன் மனுவினை கட்சி செய்யும் பொருட்டு அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாகவும், அசல் மனுவில் பல்வேறு இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்வதை தவிர்க்கும்பொருட்டும், மேலும் இவ்வழக்கின் நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுதொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 5–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.05 10:58:00 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.05 10:58:09 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.